
www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

18·10·90

கிண்ணம் 1 எண்ணம் 10

## அன்புவழி காட்ட வந்த
## காந்தித் தாத்தா



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

CHILDREN LIT[illegible] MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எண்ணம் - 10

அன்புச் சிறுவர்களே!

உங்கள் ~~கையில்~~ அமுதம் புது மாதிரியாக உங்கள் கையில் தவழுகின்றதல்லவா? தமிழ்க் குழந்தைகள் தமிழ் படிக்க் கூடாது என்கிற தமிழர் மத்தியில் தோன்றியதே அமுதம். அது தோன்றிய நாளில் இருந்தே சேர்ந்திருந்து அமுதத்தை இல்லாமற் செய்ய முயற்சித்தவர்கள் பலர். அவர்கள் முயற்சிகள் எடுபடாது என்பதை அமுதத்திற்குப் பெருகி வரும் ஆதரவுகள் நிரூபிக்கின்றன.

அவ்வாறான ஆதரவாகவே அமுதம் கம்பியூட்டர் எழுத்தில் வருவதும் ஆகும். இவ்வுதவிகளைச் செய்து தருபவர்கள் எனக்காக மட்டும் உதவவில்லை என்பதும் எமது எதிர்காலச் சந்ததிகளான உங்களில் கொண்ட அக்கறைதான் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது எனது கடமையாகிறது.

அவர்களுக்கு உங்கள் நன்றியாக, உங்கள் திறமைகளை அமுதத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுங்கள் என அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர்

உங்கள் விடைகளையும் உங்கள் ஆக்கங்களையும் உங்கள் கையெழுத்தாகவே, அனுப்பிவையுங்கள். பெற்றோரின் உதவியை எழுதுவதற்கு மட்டும் நாட வேண்டாம். 'அமுதம்' தமிழ்ச் சிறுவர்களாகிய உங்களின் தாய் மொழி அறிவை வளர்க்கவே வெளிவருகின்றது என்பதை ஞாபகத்தில் கொள்ளவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரம்

சிங்கம் ஒன்று பசியால் வருத்தப்பட்டது. எங்கு தேடியும் இரை கிடைக்கவில்லை. காட்டுக்கு அருகே உள்ள வயல்ப் பக்கமாக நடந்து வந்தது.

சிங்கம் ஒரு கழுதையைக் கண்டது. இரண்டையும் ஒரு சேவல் கண்டது. கழுதையைச் சிங்கம் அடித்துச் சாப்பிடப் போகிறதே என வருந்திய சேவல் கூவத் தொடங்கியது. சேவலின் கூவல்ச் சத்தம் சிங்கத்திற்குப் பிடிக்காதது. இச்சத்தம் கேட்டால் சிங்கம் விழுந்தடித்து ஓடிவிடும்.

சேவலின் கூவல் சத்தம் கேட்டதும் கழுதையை விட்டுவிட்டுச் சிங்கம் தப்பினால் போதும் என்று ஓடத் தொடங்கியது. "என்ன சேவலுக்குப் பயந்து சிங்கம் ஓடுகிறதே! அப்படி என்றால் இது பலவீனமான சிங்கம் போலிருக்கிறது. சேவலால் ஓடக் கலைக்க முடியுமானால் என்னால் சிங்கத்தை அடித்து முறிக்க முடியாதா? நான் என்ன சேவலை விடக் குறைந்தவனா?" என்று கழுதை நினைத்தது. சிங்கம் ஓடிய பாதையை நோக்கி ஓடியது.





www.tamilarangam.net

அங்கு கழுதை தனியே வருவதைக் கண்ட சிங்கம் அதை அடித்துச் சாப்பிட்டது.

*** ஒவ்வொருவரும் தமது பலம் பற்றிப் பெரிதாகவும் மற்றவர்களுடைய பலத்தைக் குறைவாகவும் மதிப்பிடுவதால் அழிவுதான் வரும் என்கிற நீதி இதில் சொல்லப் பட்டுள்ளது.

---

"அமுதம்" ஓவியர்களின் உதவியை நாடி நிற்கின்றது. ஓவியர்களின் உதவி மூலம் நிறைந்த படங்க-ளுடன் வெளி வந்து சிறுவர்களை மகிழ்ச்சிப் படுத்த விரும்புகின்றது - ஓவியர்கள் தொடர்பு கொள்ளவும் - அமுதம்

# பழமொழிகள்

1. காக்கை அறியுமா எருதின் வேதனை?.
2. ஆற்றில் தண்ணி போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும்.
3. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்.
4. நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து போகுமா?.
5. ஊர் கூடித்தான் தேர் இழுக்க முடியும்.
6. ஆத்திக்காரனுக்கு புத்தி மட்டு.
7. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
8. திக்கவற்றவனுக்குத் தெய்வம் தான் துணை.
9. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
10. அலை ஓயட்டும் என்று தலை முழுகாமல் இருக்க முடியுமா?.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிநேகிதம்



இரண்டு நண்பர்கள் காட்டுவழியே சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு கோடாரி கிடந்தது. ஒருவன் அதை எடுத்தான். உடனே "நான் ஒரு கோடாரியை எடுத்தேன்" என்றான். அதற்கு மற்றவன் "நான் என்று சொல்லாதே, நாம் எடுத்தோம் என்று சொல்" என்றான்.

சிறிது நேரத்தில் அந்தக் கோடாரியின் சொந்தக்காரன் "யாராவது எனது கோடாரியைக் கண்டீர்களா?" என்று சத்தம் போட்டுக் கொண்டு வந்தான். கோடாரியை எடுத்தவன் மற்றவனிடம் "நாங்கள் பிடிபட்டோம்" என்றான். அதற்கு மற்றவன் "நாங்கள் பிடிபட்டோம் என்று சொல்லாதே! நான் பிடிபட்டேன் என்று சொல்லு, நீதானே கோடாரியை எடுத்தாய்! முதலில் நீ சொன்னதுதான் சரி" என்றான்.

இன்பத்தில் வலிந்து பங்கு போட வருபவர்கள் துன்பத்தில் நழுவி விடுவார்கள். போலிச் சிநேகிதம் இப்படியானவை என்ற நீதி ஈசாப்பு நீதிக்கதையில் சொல்லப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதிரவன்



சூரியன் கிழக்கில் வருகின்றான்;
சுறுசுறுப் பெல்லாம் தருகின்றான்;
பாரினில் இருளை ஓட்டுகிறான்;
பட்டப் பகலைக் காட்டுகிறான்.

வட்ட வடிவாய்த் தெரிவதனால்
வையம் காக்க வருவதனால்!
பட்டொளி வீசும் பெருமையினால்
பரிதி எனும்பெயர் பெறுகின்றான்!

பகல் உண்டாக்கும் காரணத்தால்
பகலவன் எனவும் பேர்பெற்றான்;
கதிர்கள் வீசும் காரணத்தால்
கதிரவன் எனவும் பேர்பெற்றான்.

வெயிலை எங்கும் வீசுவதால்
வெயிலவன் எனவும் பேசுகிறோம்;
உயிர் கொடுக்கும் சூரியனின்
உயர்வை எண்ணிப் போற்றிடுவோம்.

ஞாலம் நிலைக்கக் காரணமே
ஞாயிறு என்னும் சூரியனே;
காலம் அதனை உண்டாக்கும்
கதிரின் பெருமை வாழியவே.

www.tamilarangam.net

வான மண்டலம் அனைத்திற்கும்
வள்ளல் போலே ஒளியதனைத்
தானம் செய்யும் சூரியனின்
சக்தியை எண்ணிப் போற்றிடுவோம்.

□ புத்தனேரி சுப்பிரமணியம்

# புதையல்

செண்பகம் எனும் பெயருடைய தாயும் சண்முகம் எனும் மகனும் ஒரு ஊரில் வசித்து வந்தனர். அடுத்தவர் உதவி இல்லாததால் இவர்கள் வறுமையில் வாடினார்கள்.


சண்முகத்திற்குத் தாய் படும் கஸ்டங்களை நினைக்கக் கவலையாக இருந்தது. தங்களது கஸ்டம் தீர என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

அவ்வூரில் உள்ள பெரியவர் ஒருவரிடம் தங்களது கஸ்டஙகளைச் சொன்னான். அதற்கு அவர் காட்டில் தவம் செய்யும் முனிவருக்கு புதையல் இருக்கும் இடம் தெரியும். அவரிடம் போனால் புதையல் பற்றிச் சொல்வார். புதையல் கிடைத்து விட்டால் நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழலாம் என்று சொன்னார்.

சண்முகமும் முனிவர்களைத் தேடி காட்டிற்குச் சென்றான். நடுக்காட்டில் முனிவர் ஒருவரைக் கண்டான். முனிவரை வணங்கினான். "ஐயா, என்னைப் பெற்று வளர்த்த என் தாய் மிகவும் கஸ்டப் படுகின்றார். அவரது கஸ்டத்தை காண என் மனம் பொறுக்கவில்லை. எனக்கு எங்கே புதையல் இருக்கிறது என்பதை சொல்லுவீர்களாயின் நான் எப்படிக் கஸ்டப்பட்டாயினும் புதையலை எடுத்து என் தாயை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பேன்" எனப் பணிவுடன் சொன்னான்.

அதற்கு முனிவர் "மகனே எழுந்திரு, நீ தேடும் புதையல் ஏற்கனவே உன் தாயிடம் கிடைத்து விட்டது. இனி நீ மகிழ்ச்சியுடன் வீடு செல்லாய் [illegible]

www.tamilarangam.net



சண்முகம் வீட்டிற்கு ஓடோடி வந்தான் நடந்ததை எல்லாம் தாய்க்குச் சொன்னான். "அம்மா முனிவர் சொன்னார், புதையல் உங்களிடம் கிடைத்து விட்டதாக .எங்கே அம்மா புதையல் காட்டுங்கள்" என்று சண்முகம் கேட்டான்.

"மகனே நீதான் என்னுடைய புதையல். எந்த ஒரு பிள்ளை தன் பெற்றவளின் மகிழ்ச்சியை மனதில் நினைக்கின்றதோ அது பெற்றவளுக்கு பெரும் புதையல். முனிவர் அந்த அர்த்தத்தில் தான் சொல்லியிருக்கிறார் என்று தாய் சொன்னார்.

சிறுவர்களின் கையெழுத்தில் வரும் விடைகள் தான் போட்டியில் சேர்த்துக் கொள்ளப் படும். தமிழ் எழுதத் தெரியாத சிறுவர்களுக்குப் பரிசு வழங்க "அமுதம்" விரும்பவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றது



தமிழுத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதற்கும் அடிதான்

கந்தசாமி என்றொரு கருமி இருந்தார். கருமி என்றால் யாருக்கும் எதுவும் கொடாமல் தனக்கும் நன்றாகச் செலவு செய்து சாப்பிடாதவன் என்று உங்களுக்குத் தெரியும்.

இப்படியான கருமித்தனம் உள்ளவர்களுக்கு மற்றவர்களை ஏமாற்றிப் பிழைப்பதுதான் தொழிலாக இருக்கும்.

இந்தக் கந்தசாமிக்கு சாமிக் கந்தன் என்றொரு மகன் இருந்தான். தன் மகனும் தன்னைப் போலவே கருமியாக வரவேண்டும் எனக் கந்தசாமி விரும்பினார்.

ஆனால் சாமிக் கந்தன் தகப்பனைப் போல் இல்லாமல் தனக்குச் செலவு செய்வதில் கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தான். இதனால் தகப்பனிடம் பல முறை அடி வாங்க வேண்டியிருந்தது.

ஊரில் எங்கெங்கு கல்யாணவீடு அன்னதானம் என்றால் கந்தசாமி மகனையும் கூட்டிக் கொண்டு போவார். நன்றாக இரண்டு நாளுக்குத் தேவையான அளவிற்கு சாப்பிட்டு விட்டு வருவார்கள்.

சாமிக்கந்தனும் வர வரக் கருமித்தனங்களை உணரத் தொடங்கி விட்டான். அந்த ஊரில் ஒரு கல்யாண வீடு நடைபெற்றது. கந்தசாமி மகனையும் கூட்டிக் கொண்டு போனார். போகும் போது மூன்று நாளுக்குத்தேவையான சாப்பாட்டைச் சாப்பிட்டு விட வேண்டும் என்று அஅடிக்கடி புத்திமதி சொல்லிக் கொண்டே சென்றார்.

கல்யாணவீட்டில் தகப்பனுக்கு எதிர் வரிசையில் மகன் சாப்பிட அமர்ந்தான். மகன் சாப்பிடும் போது இடைக்கிடையே தண்ணீரும் குடித்துக் கொண்டே சாப்பிட்டான்.

இதைப்பார்க்க பார்க்க கந்தமசாமிக்குக் கோபம்தான் வந்தது. அப்படியிருந்தும் கந்தசாமி அடிக்கடி மகனைப் பார்த்து பல்லை நெருடினார். தண்ணீரைக் குடியாமல் சோற்றைச் சாப்பிடுமாறு கண்ணால் அடிக்கடிக் காட்டிக் கொண்டிருந்தார்.

ஆனால் சாமிக் கந்தன் தண்ணீர் குடித்துக் குடித்துத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சாப்பாடு முடிந்து வெளியே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நான் சொல்லச் சொல்லத் தண்ணியா குடிச்சாய்? என்று கேட்டு அடி போட்டார். அதற்கு சாமிக்கந்தன் "அப்பா அடிக்காதீர்கள் தண்ணீர் குடிச்சுச் சாப்பிட்டால் அதிகம் சாப்பிடலாம்" என்றான் "அப்படியா? எனக்கு இதை முதல்லே சொல்லவில்லை என்று கேட்டு அதற்கும் அடி போட்டார் கந்தசாமி.

# கதையும்-காரணமும்

## -கோழி-

பறவைகளில் சில பறக்கக் கூடியவையாகவும் சில பறக்க முடிய்ாதனவாகவும் இருக்கின்றன. ஆரம்பத்தில் எல்லாப் பறவைகளும் பறக்கக் கூடியனவாக இருந்தன. பொதுவாக ஆபத்தைக் கண்டதும் அவை பறந்து ஒளித்துவிட வேண்டியிருந்தது.

ஆனால் அரேபியா போன்ற பாலைவனங்களில் ஆபத்துக் குறைந்த சூழ்நிலையில் வாழ்ந்ததால் நெருப்புக் கோழி பறக்கும் தன்மையை இழந்து விட்டதாக விலங்கு பற்றிய ஆய்வாளர் நம்புகின்றனர்.

கோழி பறக்கும் பறவை இனமாகவே சொல்லப்பட்டு வருகின்றது. இது மனிதனின் வீட்டு வளர்ப்புப் பறவையாக மாறியது. மனிதன் அதற்கு வேண்டிய பாதுகாப்பைச் செய்து ஆபத்தில்லாமல் வளர்க்கிறான். ஆபத்துக் குறைந்ததால் இவை பறக்கும் தன்மையை இழந்து விட்டன.


இப்படியான அறிவியல் உண்மை இருக்கின்றது. ஆனால் ஏன் பறக்க முடியாது போயின என்பதற்கு அரபு நாடுகளில் ஒரு கதை சொல்லப் பட்டும் நம்பப் பட்டும் வருகின்றது. அதுதான் இந்தக் கதை படியுங்கள்.

இஸ்லாமியர், அரபுகள் எனப்படும் முஸ்லீம்கள் எந்த ஒரு காரியத்தைச் செய்யும் போதும் "அல்லாவின் விருப்பம் இல்லாமல் எந்தச் செயலும் நிகழாது" என்றும் "அல்லாவின் விருப்பத்தால் தொடங்குகிறோம்" எனச் சொல்லி தொடங்குவார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்லா என்பது அவர்களுடைய கடவுளின் பெயராகும். முஸ்லீம்கள் சவுதி அரேபியாவில் உள்ள "மெக்கா" என்னும் இடத்திற்கு யாத்திரை செய்வதைப் பெரும் பேறாகக் கருதுகிறார்கள்.

நீண்டகாலத்திற்கு முன்னர் ஒருநாள் பறவைகளும் மெக்காவிற்குச் செல்ல வேண்டும் என விரும்பி ஓரிடத்தில் கூடின.

வானம்பாடி என்கிற பறவையின் தலைமையின் கீழ் யாத்திரை புறப்படுவதாக அவை முடிவு செய்தன. வானம்பாடி ஏனைய பறவைகளைப் பார்த்து "அல்லா விரும்பினால் நாம் அனைவரும் நாளைக் காலையில் மெக்காவிற்குப் பயணம் செய்வோம்" என்று கூறியது.

இதைக் கேட்ட கோழிகள், "நாங்கள் பறப்பதற்கு அல்லா என்ன செய்ய முடியும்? எங்கள் இறகுகளை நாங்கள் தானே அடித்துப் பறக்கிறோம். அல்லா விரும்பினாலும் சரி விரும்பா விட்டாலும் நாங்களும் நாளைக் காலை புறப்படுகின்றோம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றன. இதைக் கேட்ட ஏனைய பறவைகள் "ஐய்யையோ இதென்ன கொடுமை! கோழிகளின் திமிரை அல்லா கண்டிப்பார் என்று சொல்லித் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றன.

அடுத்தநாட் காலையில் எல்லாப் பறவைகளும் புறப்படும் இடத்திற்கு வந்தன. கோழிகளும் வந்தன. பறவைகள் எல்லாம் அல்லாவின் விருப்பத்தின் பெயரால் இப்புனித யாத்திரையைத் தொடங்குகின்றோம் எனச் சொல்லித் தொடங்கின. கோழிகள் கோபத்துடன் "நாங்கள் எங்கள் விருப்பத்தின் பெயரால் தொடங்குகிறோம். எங்கள் வல்லமையால் பறப்போம்" எனச் சொல்லி செட்டைகளை விரித்துப் பறக்கத் தொடங்கின. ஆனால் மேலே பறக்க முடியாமல் கீழே விழுந்தன.

ஏனைய பறவைகள் "கோழிகளின் ஆணவத்தை அல்லா தண்டித்து விட்டார்" எனச் சொல்லி கிண்டல் செய்தன. கோழிகள் வெட்கம் தாங்காமல் ஒடி ஒளிந்து கொண்டன.

"கோழிகளால் பறக்க முடியாமல் போனதற்கு இப்படியும் கதைகள் நம்பப் பட்டு வந்தன. சிரிப்பாக இல்லையா? இந்தக் கதை.

# விடுகதைகள்

1. நாலு காலில் நடந்தான். இப்ப இரண்டு காலில் போகிறான் யார் அவன்?

2. சண்டைக்கு அழைக்கும் தம்பி வீட்டுக்கு வெளியே வரமாட்டான். யார் அந்தத் தம்பி?

3. இசை கேட்டால் ஆடுவான் ராசா. கோபம் வந்தால் படம் எடுப்பான். அவன் யார்?

4. அந்தியில் வருவான் அதிகாலையில் போவான் அவன் யார்?

5. உருவம் உண்டு பாவியல்ல. உடல் இல்லை ஆவியல்ல யார் அவன்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிர் பேரன் தருவான்

நடராஜா என்பவர் ஒரு சாப்பாட்டுக்கடையை நடாத்தி வந்தார். கடையில் வியாபாரம் குறைவாக இருந்தது. அதனால் கடை நட்டத்திலேயே போய்க் கொண்டிருந்தது. கடையை என்ன செய்வது என்று நடராஜா யோசித்தார். பின்னர் விசித்திரமான விளம்பரம் என்றைக் கடை வாசலில் எழுதி மாட்டினார். சாப்பாட்டுக்கடையில் பின்னர் ஒரே சனமாக இருந்தது. ஒரு நாள் கருமி ஒருவன் சாப்பாட்டுக் கடையின் வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது கடைவிளம்பரத்தைப் பார்த்தான்.

"எமது கடையில் வந்து சாப்பிடுபவர்கள் தாம் சாப்பிடுவதற்குக் காசு தரவேண்டியதில்லை. அவர்களின் சாப்பாட்டுக் காசை அவர்களின் பேரன் தருவான்" என்று அந்த விளம்பரத்தில் காணப்பட்டது.

கருமிக்கு ஆச்சரியமாக இருந்தது. கடைக்காரரிடம் விசாரித்தான். அவரும் இது உண்மை என்றார். "சரி ஏன் விடுவான். என்னுடைய பேரன்தானே காசு கொடுப்பான். தாராளமாகச் சாப்பிட்டுப் போவோம்" என்று கடைக்குள் நுழைந்தான். பின்னர் அங்கு உணவு பரிமாறும் உதவியாளரிடம்

விளம்பரத்தில் எழுதியிருப்பது உண்மைதானா எனக் கேட்க, அவனும் உண்மைதான் என்றான். கருமி தனக்குள் சிரித்துக் கொண்டான். தனக்கு விருப்பமான எல்லாவிதமான சாப்பாடுகளையும் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். இலவசம் என்றால் தன்னை அறியாத கம்பீரம் .... ஒன்று வருமே! அப்படிக் கம்பீரத்துடன் கட்டளையிட்டான். ஒருவாறு வயிறு புடைக்க கஷ்டப்பட்டுச் சாப்பிட்டு முடித்தான்.

தனக்கு உணவு பரிமாறியவரிடம் "சந்தோஷம் நான் போய் வருகிறேன்" எனச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான். உணவு பரிமாறியவர் நில்லுங்கள் என்று சொல்லி ஒரு பில்லைக் கொடுத்தார். அதில் 82ரூபா கொடுக்கும் படி இருந்தது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருமி தான் காசு கொடுக்கமாட்டேன் என்று கடைவாசலில் உள்ள விளம்பரத்தைக் காட்டி வாதாடினான். கடைக்காரரும் விளம்பரத்தை உதாரணம் காட்டி நீங்கள் 82 ரூபா தரத்தான் வேண்டும் என்று விளக்கம் கொடுத்தார். இறுதியில் கருமி 82ரூபா கொடுத்துவிட்டு கவலையுடன் சென்றான்.

அப்படியாயின் கடைக்காரர் என்ன விளக்கம் சொல்லியிருப்பார் என்பதுதான் இம்மாதப் புதிராகும். புதிரைக் கண்டு பிடிப்பவர்கள் 25/10/90 முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும்.



# கடலின் திமிர்

காற்றரசன் வானவெளியில் வேகமாகச் சென்று கொண்டிருந்தான். திடீரென அவனது பார்வை நிலத்தின் பக்கம் திரும்பியது. செடி கொடி பயிர்கள் எல்லாம் வாடிக் கிடந்தன. மெல்லக் கீழே இறங்கி வந்தான்.

நீங்கள் எல்லாம் ஏன் வாடிக் கிடக்கின்றீர்கள்? உங்களுக்கு என்ன நடந்தது எனக் காற்றரசன் கேட்டான். அரசே, ஏரி குளம் எங்கும் நீர் வற்றிப் போய்விட்டது. எங்களுக்கு உணவான தண்ணீர் இல்லாமல் போய்விட்டது. நாங்கள் பட்டினியால் வாடிப் போய் இருக்கின்றோம் என நடுங்கியவாறு அவை சொல்லின.

காற்றரசனுக்கு அவர்களின் நிலையைப் பார்க்கப் பாவமாக இருந்தது. கவலை சேர்ந்த குரலில் "விரைவில் உங்கள் துன்பத்தைப் போக்குகிறேன். போய்வருகிறேன்" என்று சொல்லிக் காற்றரசன் வேகமாகத் திரும்பினான்.

சிறிது தூரம் சென்றதும் பெரியதோர் நீர்ப்பரப்பைக் கண்டான். கீழே இறங்கி வந்தான். கடலரசனைக் கண்டான் "நண்பா உன்னிடம் நீர் நிறைய இருக்கின்றதே! சிறிதளவு பயிர்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்த உதவலாம்தானே? என்று காற்றரசன் கடலரசனிடம் கேட்டான். "ஓ... தாராளமாக வேண்டிய அளவு எடுத்துக் கொள்" என்றான் கடலரசன்.

காற்றரசன் சிறிதுநீரை அள்ளினான். அள்ளிய வேகத்தில் கீழே கொட்டி விட்டான். "என்ன ஒரே உப்பாக இருக்கிறதே" என்றான். இவற்றைக் கேட்ட கடலரசனன் பெருஞ் சிரிப்புச் சிரித்தான். என்னிடம் உள்ள நீர் குறையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் உப்பு போட்டு வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் கேட்கின்ற எல்லோருக்கும் பிச்சை போட்டுக் கொண்டிருந்தால் என் நிலைமை என்னவாகும்" என ஏதேதோ கடலரசன் சொன்னான்.

கடலரசனின் பேச்சில் கோபமுற்ற காற்றரசன் "எல்லாவற்றிலும் மிகுந்த சக்தி வாய்ந்தவனும் எல்லா உலகங்களின் தெய்வமுமான சூரியனிடம் நேரே சென்று முறையிட்டான். நடந்தவற்றையெல்லாம் சொன்னான்.

காற்றுத் தம்பியே, கோபப்படாதே, பட்டினியால் வாடுபவர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவி செய்வதுதான் எல்லாவற்றையும் விட உயர்வான செயல். கடலுக்கு எவ்வளவோ பெரிய சொத்துக்கள் இருக்கின்றன. நான் கடலுக்குத் தெரியாமல் அதன் நீரை ஆவியாக்கி வேகமாக்கி விடுகிறேன். நீ அவற்றைத் தள்ளிக் கொண்டுபோய் பயிர் பச்சைகளுக்கு மழையாய்ப் பொழி யச் செய்து விடு. அவற்றின் வாட்டம் தீரும் என்றான். அவை செழித்தால் தானே உலகமும் செழிக்கும். தாமாகக் கொடுக் காதவர் செல்வத்தை மறைமுகமாக நாம்தான் கவர்ந்து இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டும்" எனச் சூரியர் சொன்னார்.

"அது மட்டுமல்ல, காற்றுத் தம்பி மேகங்களைத் தள்ளிக் கொண்டு செல்லும்போது கோபத்துடன் செல்லாமல், குளிர்ந்த வனாய்ப் போனால்தான் மழைவரும் மறந்து விடாதே" எனவும் சொன்னார்.

அவ்வாறே கடல் நீர் ஆவி ஆகிப் பெரு மேகக் கூட்டங்கள் ஆகி, காற்று அவற்றைத் தள்ளிக் கொண்டு போய் குளிர்ந்தவன் ஆக மழை சோவெனப் பெய்தது.


வாடிய பயிர்கள் நிமிர்ந்தன. மகிழ்ச்சியில் ஆடிப்பாடின.

www.tamilarangam.net

கருத்துரை: எம்மிடம் இருப்பவற்றை இல்லாதவர்களுக்குக் கொடுப்பதுடன் உதவி செய்ய முன் வராதவர்களின் மனம் நோகாமல் கவர்ந்து இல்லாதவர்களுக்குக் கொடுப்பதும் தலை சிறந்த தர்மங்களில் ஒன்றாகும்.

விஜிதா இராமலிங்கம்

# ஏன்



காட்டில் வாழ்ந்து வந்த நரிக்கு, நாட்டில் உள்ளவர்களுடன் சினேகிதம் வைக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அப்படி என்றால்தான் ஏனைய மிருகங்கள் தன்னை மதிக்கும் என எண்ணியது.

ஒரு நாள் காட்டின் கரையோரமாக நரி வந்தது. யாராவது நாட்டில் உள்ளவர்கள் வருகிறார்களா என்று பார்த்தது. தூரத்தில் ஒரு பூனை வருவதைக் கண்டது.

பூனையை "நண்பனே இங்கே வாருங்கள் என நரி அழைத்தது பூனையயும் நரியின் அருகே வந்தது. நண்பனே எனக்கு உன்னுடைய நட்புத் தேவையாய் இருக்கின்றது. நீ என்னுடன் நட்பாக இருப்பாயா?" என்று கேட்டது. அதற்குப் பூனை நரியே உன்னுடன் நட்பாக இருப்பதில் எந்தவிதமான மறுப்பும் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் நான் நாட்டிலும் நீ காட்டிலும் இருந்து எப்படி நட்பை வளர்த்துக் கொள்ள முடியும்? அதுதான் யோசனையாய் இருக்கின்றது. என்று பூனை சொல்லியது.

அதற்கு நீ யோசிக்க வேண்டியதில்லை என நரி சொல்லியது. அன்று முதல் இருவருடைய நட்பும் வளர்ந்தது. நரி பூனையுடன் சினேகிதம் கொள்வதை ஏனைய நரிகள் விரும்பவில்லை. பூனை எப்படித்தான் நல்லதாக இருந்தாலும் அதனுடைய இருப்பிடம், வாழ்க்கை முறை, தொழில் எல்லாமே வேறாய் இருக்கின்றன. எமக்குத் தோதாக உள்ளவர்களுடன் சினேகம் கொள்ளலாம். இது என்னவோ நல்லதற்கென்று விளங்கவில்லை என்று ஏனைய நரிகள் எல்லாம் அந்த நரிக்குப் புத்திமதிகள் கூறின.

அதற்கு நரி "நான் நாட்டில் உள்ள பூனையுடன் சினேகம் இருப்பது உங்களுக்குப் பொறாமையாக இருக்கின்றது அதுதான இப்படி வயிற்றெரிச்சலுடன் ஊளையிடுகின்றீர்கள் எனச் சொல்லிவிட்டுப் பூனை வரும் இடத்திற்குச் சென்றது.

பூனையும் வந்து காத்திருந்தது. பூனையைக் கண்டதும் "நண்பனே இன்று என்னையும் உனது நாட்டுப் புறத்திற்குக் கூட்டிச் செல்லவேண்டும். எனக்கு நாட்டைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது என்று நரி சொல்லியது. அதற்குப் பூனை "நண்பனே நீ அங்கு வரவேண்டும் என இப்ப விரும்பாதே. கொஞ்ச நாள் போகட்டும் உன்னை அங்கு கூட்டிச் செல்கிறேன் எனச் சொன்னது. நரி விடவில்லை. எப்படியும் கூட்டிச் செல்லவேண்டும் என்று பிடிவாதமாக நின்றது. வேறு வழியில்லாமல் பூனை நரியைக் கூட்டிச் சென்றது.

நாட்டிற்குச் சென்றதும் பூனை தன்னுடைய இருப்பிடத்திற்குச் சென்றது. நரிக்குப் பசி வந்து விட்டது. பூனையிடம் தனது பசியைச் சொன்னது. பூனையின் வீட்டில் சாப்பாடில்லை. அடுத்த வீட்டிற்குப்போய் ஏதாவது களவெடுத்துச் சாப்பிடலாம் என்று நரியை அங்கு கூட்டிச் சென்றது. அங்கு நிரம்பச் சாப்பாடுகள் இருந்தன. இருவரும் வயிறாரச் சாப்பிட்டார்கள். பூனையின் காலில் ஏதோ விழுந்தது. பூனை "மியாவ் மியாவ்" என்று கத்தியது. நரி பூனையின் காலில் விழுந்ததைக் காணவில்லை. பூனை கத்தியதை மட்டுமே பார்த்தது.

www.tamilarangam.net

நாட்டில் சாப்பிட்டு முடிந்ததும் கத்துகிற வழக்கம் ஒன்று இருக்குது போலிருக்கிறது. அதுதான் பூனை கத்தியது. நானும் ஏன் விடுவான் என்று நரியும் ஊளையிட்டுக் கத்தல் போட்டது.

வீட்டுக்காரன் ஓடிவந்தான். நரிக்கு நல்ல அடி போட்டான். பூனை ஓடி ஒளிந்து விட்டது. நரி நொண்டி நொண்டி காட்டிற்குள் ஒரு மாதிரி வந்து. ஒரு பற்றைக்குள் விழுந்து அழுது கொண்டிருந்தது. ஏனைய நரிகள் சத்தம் கேட்டு ஓடி வந்தன. நரி காயங்களுடன் அழுது கொண்டிருப்பதைக் கண்டன.

"கூடாத கூட்டம் கூடவா சொன்னோம்" என்று பாடின. அழுது கொண்டிருந்த நரி...

"கூடினால் என்னவாம்?" என்று பாட்டிலே கேட்டது.

"கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்"
என்று நரிகள் பாட 'ஏறினால் என்னவாம்' என நரி பதிலுக்குப் பாடியது.

"நீ கூடாத கூட்டம் கூடினாய் போதாது என்று கூடங்கள் மாடங்களும் ஏறினாய்
நாங்கள் உன்னைப் பாடவா சொன்னோம்' எனப் பேசிவிட்டு,
'நாதங்கள் கீதங்கள் பாடவா சொன்னோம்' எனப் பாட
பாடினால் என்ன என்றது. ரோசமாகவும் கேட்டது.
பாடினதுக்குத்தானே தாளம் போட்டார்கள் என்று சொல்லிவிட்டு எல்லா நரிகளும்

கூடாத கூட்டம் கூடவா சொன்னோம்
கூடங்கள் மாடங்கள் ஏறவா சொன்னோம்
நாதங்கள் கீதங்கள் பாடவா சொன்னோம்
பாடினதாலே தாளங்கள் மேளங்கள்
தக்கதிம்மென விழுந்தனவே" என்று கேலி செய்து பாடிக் கொண்டிருந்தன.



உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு என மேடையில் மூச்சு வாங்கப் பேசும் ஒரு ஐரோப்பிய தமிழ் சஞ்சிகையின் ஆசிரியர் தன் பிள்ளைகள் தன்னை அப்பா என்று கூப்பிடுவதை இழிவாக நினைக்கின்றார். ஆனால் தமிழுக்கு உயிர் கொடுக்கிறேன் என்கிறார். பாவம் அவரல்ல, தமிழ்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடைகள் 3

சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள
கிரகம் புதன்(MERCURY) ஆகும்.
நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட
இலங்கையை தீவு என அழைப்பர்.
கிழக்கின் சொர்க்கம் எனப் புகழப்பட்ட
நாடு இலங்கை ஆகும்.
மத்திய கிழக்கில் ஈராக் என்னும் பெரிய
நாடு குவைத் என்னும் சிறிய நாட்டை
ஆயுத பலத்தால் தாக்கிஉள்ளது
ஐரோப்பாவில் ஜேர்மன் (Deutsch) மொழி
பேசப்படும். நாடுகள் : ஜேர்மனி,
சுவிற்சர்லாந்து, லக்ஸம்பேர்க்(LUXEMBERG)
ஆஸ்த்திரியா (AUSTRIA - ÖSTERREICH)
லீச்ரென்ஸ்ரைன் LIECHTENSTEIN)
என்பனவாகும். லீச்ரென்ஸ்ரைன் நாட்டை
பெரும்பாலும் குறிப்பிடவில்லை. இவர்
பெல்ஜியம், நெதர்லாண்ட், நியூசிலாந்து
எல்லாம் குறிப்பிட்டிருந்[illegible]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியான விடைகளை எழுதியவர்கள் விபரம்.

செல்வி. மதிவதனி - அருணகிரி நாதன்
3590 BADWILDUNGEN

செல்வி கபிலினி - தெய்வேந்திரம்
5650 SOLINGEN - 19

செல்வி. ஜஸ்மின் - ராஜ்குமார்
5138 HEINSBERG

செல்வி சிந்துஜா - நவரெட்ணம்
4005 MEERBUSCH - 2

செல்வன் கஜன் - தெய்வேந்திரம்
5650 SOLINGEN - 19

செல்வன் பிலகரி - ஜீவநேசன்
5138 HEINSBERG

இவர்களில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்டு, கதைப் புத்தகம் பரிசாகப் பெறுபவர்.

செல்வன். பிலகரி ஜீவநேசன்
ALBERT SCHWEIZER STR 24
5138 HEINSBERG



www.tamilarangam.net

விடுகதை விருந்தில் (புரட்டாதி) முழுமையான விடைகளை எவரும் எழுதி அனுப்பவில்லை. ஆனாலும், கூடிய, சரியான விடைகளை எழுதிய. செல்வி கவிலினி - தெய்வேந்திரம்
HAANER STR 16, 5650 SOLINGEN-19
கதைப் புத்தகம் பரிசாகப் பெறுகின்றார்.

விடுகதை விருந்தில்
பங்கு கொண்டு
குறைந்த விடைகளை
எழுதிய




செல்வன் நிஷாந்தன் - நவரெட்ணம்.
4005 MEERBUSCH-2
செல்வன் அமளம்ஜி ஜீவநேசன்
5138 HEINSBERG ஆகிய
பாராட்டைப் பெறுகின்றனர். விடைகள்:
1) காற்று, 2) தேங்காய், 3) கடிதம்
4) வெங்காயம், 5) முகம் பார்க்கும் கண்ணாடி
6) தையற்காரர் (சட்டை கத்திரிக்கோல்)

www.tamilarangam.net

# வினாவிடைப் போட்டி 4

1) சூரியனைக் குறிக்கும் வேறு பெயர்கள் ஐந்து தருக?

2) ஐரோப்பாவில் பிரெஞ் (FRENCH) மொழி ஐந்து நாடுகளில் பேசப்படுகின்றது மூன்று நாடுகளின் பெயர்கள் தருக.?

3) யாழ்ப்பாணக்குடா நாட்டில் மலைகளும் ஆறுகளும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் சில ஊர்களின் பெயர்கள் மலை என்றும் ஆறு என்றும் முடிகின்றன. அப்படி உள்ள இரண்டு மலை ஒர் ஆறு எழுதுக.

4. எதனை "யாழ்ப்பாணத்தின் கற்பகதரு என அழைக்கின்றார்கள்.?

5. ஜேர்மனி நாட்டைச் சூழ உள்ள (எல்லையாக) நாடுகள் எவை?

விடைகளை 25/10/90 முன்னர் அனுப்பிவைக்கவும். விடை எழுதும் தாளில், பெயர், பிறந்ததிகதி, முகவரி, குறிப்பிடவேண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒற்றுமை



பாப்பாப் பாட்டு

காட்டில் ஒரு சிங்கம்
கவலையுடன் எங்கும்
வேட்டை ஆடப் போயும்
வெறுங்கையோடு ஓயும்
நாளும் இரண்டு ஆச்சு
நலிந்து சிங்கம் போச்சு
தூரத்தே நான்கெருது
துள்ளி மேய்வதை
ஓரத்தே கண்டதனால்
ஓடிப்போய் பிடித்ததுவே
நாலு பேர் ஆனதனால்
நல்ல இடி போட்டனர்
காலு நொண்டி ஆனது
கவலையோடு போனது
வழியிலே நரி வந்தது
வாட்டம் பற்றிக் கேட்டது
எளிதில் அவற்றை வெல்ல
என்னிடமே விட்டுவிடும்
கூட்டமான எருதுகளை
குழிபறித்தே வீழ்த்தலாம்
ஈட்டமான வேலையை
இன்றே செய்வேன் ராசாவே
எருதுகளைத் தனித்தனியே
இந்த நரி பிரித்தது
பொருதுகின்ற வலிமையோ
பொடிப் பொடியாய்ப் போனதே



www.tamilarangam.net

ஒற்றுமையாய் இருக்கையிலே
ஒன்றும் செய்யாச் சிங்கமோ
மற்றவர்கள் பிரிந்த பின்னர்
மடமடவென எருதுகளை
ஒவ்வொன்றாயத் தின்றது
உண்மை என் னதெரியுமா?
ஒவ்வொருவர் ஆனாலும்
ஒற்றுமையாய் இருப்பவரை
சிங்கம் கூட வெல்லாது
சிந்தனையி ல் கொள்வோமே
தங்கம் போன்ற உண்மையைத்
தாங்கிடுவோ ம் நாளுமே.

சின்னராஜேஸ்வரன்



# தெய்வபக்தி

ராஜாவும் ரகுவும் நண்பர்கள். ஒருநாள் மாலை ஐந்து மணி முருகன் கோவில் மணியும் டாண்! டாண்! என்று அடித்துக் கொண்டிருந்தது. ரகு கோவிலுக்குச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். ராஜா மணலில் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தான். ரகு ராஜாவிடம் வந்து "ராஜா வா கோவிலுக்குப் போய் சாமி கும்பிட்டு வருவோம்" என்று அழைத்தான். ஆனால் ராஜா தான் வரமாட்டேன் என்று மறுத்து விட்டான்.

ரகு தனியே கோயிலுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தான். வழியில் காலில் ஒரு முள் குத்திவிட்டது. ரகு நொண்டிக் கொண்டு வருவதைக் கண்ட ராஜா ஏளனமாகச் சிரித்தான். "நான் உன்னுடன் கோவிலுக்கு வராமல் மணல்வீடு கட்டி விளயாடியதால் ஒரு ரூபா எடுத்தேன். நீ சாமியைக் கும்பிடப் போய் காலில் முள்ளுக் குத்திக் கொண்டு வந்திருக்கின்றாய் என்று ராஜா கேலி செய்தான்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரகுவிற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவர்கள் கதைத்தவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த தாத்தா ஒருவர் இருவர் அருகேயும் வந்தார்.

தம்பிமார்களே! ரகுவிற்கு இன்று பாம்பு கடித்திருக்க வேண்டும். ஆனால் கடவுள் நம்பிக்கையுடன் கோவிலுக்குப் போய் வருவதால் பாம்பு ஒன்றாகிவிட்டது ராஜாவிற்கு இன்று நூறு ரூபாய் கிடைத்திருக்கவேண்டும். ராஜா கோவிலுக்குப் போகாததால் நூறு ஒன்றாகி விட்டது. இதுதான் நடந்தது" என்று விளக்கமாகச் சொன்னார். ரகு சந்தோஷப் பட்டான். ராஜா மனம் வருந்தினான்.

சிந்துஜா நவரட்னம்
4005 Meerbusch 2

# தெரிந்து கொள்ளுங்கள்

✗. மின்மினிப்பூச்சிகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? அவை இரவில் மின்னிக் கொண்டு பறந்து திரியும் மிகச் சிறிய பூச்சிகள். அந்தப் பூச்சிகளில் 12ஐ ஒன்று சேர்த்து விட்டால் இருட்டில் புத்தகம் படிப்பதற்கான வெளிச்சம் வந்துவிடும்.

✗. நான்கு கண்கள் கொண்ட மீன்கள் மத்திய அமெரிக்காவில் காணப் படுகின்னறன.

✗. சூரியனைச் சுற்றி எண்ணற்ற வால்நட்சத்திரங்கள் காணப்படுகின்றன.

✗. பாம்பு வாசனையைத் தனது நாக்கினாலேயே அறிகின்றது.

✗. தவளையால் தலையைத் திருப்ப முடியாது. அதற்கு கழுத்து இல்லை.

✗. இரத்தம் சிவப்பாக இருக்கின்றது என்று சொல்லுகின்றோம் அல்லவா? ஆனால் வெட்டுக்கிளியின் இரத்தத்தை அப்படிச் சொல்ல முடியாது. பால்போன்ற வெள்ளையானது அதனுடைய ரத்தம்.

✗. எல்லாப் பறவைகளும் கூடு கட்டி வாழுகின்றன என்று சொல்ல முடியாது. ஆந்தை கிளி என்பன மரப் பொந்துக்குள்தான் சீவிக்கின்றன.

✗. எருதினால் நிறங்களைக் காணமுடியாதாம் அப்படி என்றால் ஸ்பானிய மாட்டுச் சண்டையில் ஏன் சிவப்புத் துணியைக் காட்டுகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரன்

நான் ஒரு சின்ன வீரன்தானே
எனது திறமை கேளடா தம்பி
ஒட்டைப் பானை ஒன்றைக் கண்டேன்
உள் ஓர் எலியும் நுழையக் கண்டேன்
பானை உள்ளே கையை விட்டு
பதுங்கி எலியைப் பிடிக்கப் போனேன்
பதுங்கி எலியும் உயரப் பாய்ந்தது.
கோபம் வந்தது கண்ணும் சிவந்தது
கொட்டன் கொண்டு பானையை அடித்தேன்
அப்பா ஓடி அங்கே வந்தார்
அது என்னடா சத்தம் என்று கேட்டு
அடுத்து ஐந்தடி எனக்கு தந்தார்.
அம்மா ஓடி அங்கே வந்தார்.
அழாதையடா கண்ணா என்று சொல்லி
அணைத்து முத்தம் ஐந்து தந்தா

அனுப்பியவர்: நிசாந்தன் நவரட்ன
4005 Meerbusch 2

# காந்தித்தாத்தா

அன்புச் சிறுவர்களே!

இம்மாத அமுதத்தில் அட்டைப்படமாக காந்தித் தாத்தாவைப் போட்டிருக்கின்றோம். காந்தித் தாத்தாவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

சாதாரண தாத்தாக்களையே தெரியாமல் வாழும் எங்களுக்கு காந்தித்தாத்தாவையா தெரியும் என்றுதானே சொல்லப் போகின்றீர்கள். நீங்கள் சொல்வதும் சரிதான். உங்களில் சிலர் வீடியோப் படத்தில் காந்தியைப் பார்த்திருக்கிறோம் என்று நிட்சயமாகச் சொல்வீர்கள். ஆம் காந்தித் தாத்தாவைப் பற்றிய ஆங்கிலத் திரைப்படம் ஒன்று வெளிவந்துமுள்ளது.


தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார் இந்த காந்தித் தாத்தா அவரைப் பற்றித் திரைப்படம் வருகின்ற அளவிற்கு அவர் புகழ் பெற்றவரா? என்று பல கேள்விகள் உங்களுக்குள் எழுகின்றன அல்லவா?

காந்தித்தாத்தா இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்ப் பந்தல் என்னும் இடத்தில் 1869ம் ஆண்டு பிறந்தார். காந்தித் தாத்தாவின் பிறந்த அக்டோபர் மாதத்தை நினைவு படுத்துமுகமாக இம்மாதம் அவரது படத்தைப் போட்டிருக்கின்றோம்.

காந்தித்தாத்தாவின் தந்தையின் பெயர் கரம்சந்திர காந்தி. தாயின் பெயர் புத்திலிபாய். இளமையிலே உண்மை நேர்மை எளிமை கருணை போன்ற குணங்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். அதனால் இந்தியாவின் மதிப்புக்குரியவர் ஆனார். மகாத்மா காந்தி என அழைக்கப்பட்டார்.

இவரது காலத்தில் இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டுக் கிடந்தது. இந்தியாவில் இருந்து ஆங்கிலேயரை வெளியேற்ற வேண்டும் என்று ஆயுதம் இல்லாத படையை உருவாக்கினார்.

காந்தித்தாத்தாவின் அன்புவார்த்தையும், வன்முறை இல்லாத கருணையும் தான் தனது ஆயுதங்களாக்கிக் கொண்டார். எளிமையாகவும், மற்றவர்களுக்குச் சேவை செய்வதையும் தனது கடமையாகக் கொண்டார். இங்கிலாந்தில் மகாத்மா காந்தி படித்த காலத்தில் நடைபெற்ற சிறுசம்பவம் ஒன்றை உங்களுக்குச் சொல்லப் போகின்றேன். அதிலிருந்து நீங்கள் அவரைப் பற்றி இன்னும் இன்னும் அறிய விரும்புவீர்கள் என்பது நிட்சயம்.

இங்கிலாந்தில் வாழ்ந்த இந்தியர்கள் தீபாவளியைச் சிறப்பாக கொண்டாட எண்ணினார்கள். அதற்கு ஓர் இந்தியத் தலைவரை தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர் தீபாவளித் தினம் இந்தியச் சமையல் (மரக்கறி) செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அழைத்தவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

தீபாவளித் தினம் பகல் சமையல் வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தன. தலைவரை அழைக்கச் சென்றவர்கள் வெளியே சென்று விட்டனர். அப்போது ஒரு மெலிந்த உடலும், எளிய தோற்றமும் உடைய ஒருவர் வந்து தானும் சமையலுக்கு உதவி செய்வதாகக் கேட்டுக் கொண்டார் அவர்களும் அவரைக் கொண்டு கடினமான வேலைகளைச் செய்வித்தனர். அவரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அலுக்காமல் மகிழ்ச்சியுடன் அவர்கள் சொன்ன வேலைகளைச் செய்தார்.

மாலையானதும் தீபாவளிக் கூட்டத்தின் போது மேடையில் அந்த மெலிந்த எளிமையான தோற்றத்துடன் சமையல் வேலைகள் செய்தவர் தான் தலைமை தாங்கினார்.

அவர்தான் மகாத்மா காந்தி அவரைக் கொண்டு வேலை செய்வித்தவர்களுக்குப் பெரிய வெட்கமும் சங்கடமுமாக இருந்தது.

"ஆன்"

(காந்தி பற்றிய செய்திகள் அமுதத்தில் தொடர்ந்து வெளிவர உள்ளன)



# தேனும் வேம்பும்

ஒரு காகமும் வண்டும் வழியில் சந்தித்துக் கொண்டன. "வண்டுத்தம்பி எங்கிருந்து வருகின்றாய்?" என்று காகம் கேட்டது. "சோலையில் இருந்து வருகின்றேன் காக்கையண்ணா" என்று வண்டு பதில் சொல்லியது. நானும் அங்கிருந்துதானே வருகின்றேன் உன்னை அங்கு காணவில்லையே, அங்கு என்ன செய்து கொண்டிருந்தாய்? காகம் கேட்டது.

"காக்கையண்ணா, சோலையில் பூஞ்செடிகள் இருக்குமே, அந்தப் பக்கம்தான் நான் இருந்தேன். அங்கு பூக்களில் இருக்கும் தேனைக் குடித்துக் கொண்டிருந்தேன்" என்று வண்டு பதில் சொல்லியது.

"தேனா? அது எப்படி இருக்கும்"என்று காகம் ஆவலுடன் கேட்டது. "என்ன தேன் என்றால் உங்களுக்குத் தெரியாதா? ஆ! கடவுளே தேன் என்று சொல்லும் போதேவாய் இனிக்கும். அதன் இனிப்புச் சுவைக்கு இணையானது இந்த உலகில் இல்லை" என்று வண்டு சொல்லியது.

"பூ, இவ்வளவுதானா? என்று காகம் அலட்சியமாகப் பதில் கூறியது.

www.tamilarangam.net

என்ன காக்கையண்ணா பூ என்று சொல்லிவிட்டீர்கள். பூவிலிருந்து கிடைக்கிறது என்பதாலா? தேனைக் குடிக்கும்போது வாய்க்கு ருசியாக வயிற்றுக்கு நிறைவாக உடலுக்குச் சத்தாகவும் உஸ்ணத்திற்கு இன்பமாகவும் இருக்கின்ற தேனை இப்படிப் பூ என்று சொல்லிவிட்டீர்களே" என்று தேன் உண்ட மயக்கத்தில் வண்டு பேசியது.

"வண்டுத் தம்பி, நீ கண்டது அவ்வளவுதான், என்னுடைய வேப்பம் பழத்திற்கு மேலாகவா இதெல்லாம். எனக்கு வேப்பம் பழம் கிடைத்தால் இந்த உலகத்தையே மறந்து விடுவேன். நீ என்ன என்றால் எனக்குத் தேனைப் பற்றி அளக்கிறாய்" என்று சொல்லிக் கொண்டு காக்கா பறந்து சென்றது.

- விஜிதா இராமலிங்கம்

புரட்டாதி அமுதத்தில் வந்தபதிருக்கிவிடை சிங்கத்திடம் வந்தமுயல் தனக்குத் தடிமன் என்று சொன்னது. தடிமனுக்குப் பயந்த சிங்கம் முயலை ஒன்றும் செய்ய முடியவில்லை. —

## பழமொழிகள்


1. நாய் வாலை நிமிர்த்த முடியாது.
2. தனி மரம் தோப்பு ஆவதில்லை.
3. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
4. நெருப்பில்லாமல் புகையாது.
5. புலியைப் பார்த்து பூனை சூடு போடுக் கொண்டதாம்.
6. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.
7. ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும்.
8. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
9. நரிக்கு நாட்டாண்மை கிடைத்தால் வேளைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
10. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எறும்பு



எறும்பு ஒரு மிகச் சிறிய பூச்சி அல்லவா? எறும்புதானே என்று நாம் மிகச் சாதாரணமாகச் சொல்லிவிடலாம், ஆனால் அவை பற்றிய செய்திகள் சாதாரணமானவை அல்ல.

X. உலகில் உள்ள உயிரினங்களில் அதிக எண்ணிக்கையில் உள்ளவை எறும்புகள்தான்.

X. உலகில் உள்ள மனிதர்களின் மொத்த நிறையைவிட உலகில் உள்ள எறும்புகளின் நிறைதான் அதிகம்.

X. மனிதன் கூடி வாழத் தொடங்க முன்னர் பலபல வட்சம் வருடங்களுக்கு முன்னர் எறும்புகள் கூடி வாழத் தொடங்கி விட்டனர்.

X. எறும்புகளில் எமக்கு சிற்றெறும்பு, கட்டெறும்பு, நெருப்பெறும்புதான் தெரியும் ஆனால் அவற்றில் 15000 மேற்பட்ட வகைகள் இருக்கின்றன.

X. எறும்புகள் தமது வேலையை மனிதரைப் போன்று பிரித்துத்தான் செய்கின்றன. குஞ்சுகளைப் பராமரித்தல், வீடு கட்டுதல், எதிரிகளுடன் போரிடுதல், உணவு சேகரித்தல், என்று குழுக்களாக பிரிந்து வேலை செய்கின்றன.

X. சிலவகையான எறும்புகள் தாவரத்தேனை மட்டுமே உண்ணுகின்றன. அவ்வகை எறும்புகள் நாங்கள் பாலுக்காக பசுவை வளர்ப்பது போல தாவரத்தேனை சேகரித்து தரக்கூடிய பூச்சிகளை வளர்க்கின்றன. அந்தப் பூச்சிகளை தாவரத்தில் மேயவிட்டு எதிரிகளிடம் அகப்படாமல் பாதுகாக்கின்றன. பூச்சிகளுக்கு தங்குமிடம் அளித்து வழங்குகின்றன. பூச்சிகளிடம் இருந்து பின் தேனைக் குடிக்கின்றன.

X. மனிதர்களைப் போலவே எறும்புகளும் விவசாயம் செய்கின்றன. தாம் வசிக்கும் இடத்தைச் சுற்றி விதைகளைத் தூவி விதைக்கின்றன.. புல் வெட்டக் கூடிய எறும்புகளால் அவை வெட்டப் பட்டு உணவாகின்றன.

www.tamilarangam.net

# தண்டனை

அரசனின் படுக்கை அறையை வேலைக்காரன் ஒருவன் சுத்தம் செய்து கொண்டிருந்தான். படுக்கையை விரித்தான். பலவிதமான வேலைப்பாடுகள் அமைந்த உயர்ரகத் துணிகளால் படுக்கையை அலங்காரம் செய்தான். அறையிலும் அருகிலும் வேறு ஒருவரும் இல்லை.

ஒருவரும் இல்லைத்தானே ஒருதரம் கட்டிலில் படுத்துப் பார்ப் போமே என வேலைக்காரன் ஆசைப்பட்டான். ஆசை மிகுதியால் உடனே படுக்கையில் விழுந்து படுத்தான். திடீரென நித்திரையாகி விட்டான்.

வேறு அரண்மனைச் சேவகர்கள் அரசனின் படுக்கை அறைக்கு வந்தனர். வேலைக்காரன் படுத்திருப்பதை அரசனுக்குத் தெரியப் படுத்தினர். அரசன் உடனே வந்தான். தனது படுக்கையில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்த வேலைக்காரனை எழுப்பினான். தனது படுக்கையில் படுத்த குற்றத்திற்காக நூறு அடிகள் தண்டனையாக வழங்கினான். அடி வாங்கியவேலைக்காரன் அழாமல் இறுதியாக அடி விழுந்தபோது அழுதான். என்ன நூறு அடிகள் வாங்கி அழாமல் கடைசியில் ஏன் அழுதாய்? என அரசன் கேட்டான்.

அதற்கு வேலைக்காரன் ஒருநாள் படுத்ததற்கே எனக்கு நூறு அடிகள் என்றால் பலநாட்கள் படுக்கையில் படுத்த உங்களுக்கு விழப் போகின்ற அடிகளை நினைத்தேன். பயமாக இருக்கின்றது. அதுதான் அழுதேன் என்றான்.



www.tamilarangam.net

# விடுகதைகள்

1. இரவும் பகலும் தொடர்ந்து வேலை படுத்து விட்டால் எழுப்ப முடியாது யார் அவர்?
2. உப்பைச் சாப்பிட்டதால் உறங்காமல் அலைகின்றான் யார் அவன்?
3. சொன்னதைத் திருப்பிச் சொல்லுவான் ஆனால் ஆளைக் காண முடியாது யார் அவன்?
4. எடுத்துக் கிழித்தால் நெருப்பு இல்லாவிட்டால் இருப்பு அது என்ன?
5. என் தாய் கடல். என் தந்தை சூரியன் நானில்லாத வீடு இல்லை. நான் யார்?



# புத்திசாலி

மவுசுமி சக்கரவர்த்தி என்னும் எட்டு வயதுச் சிறுமி இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் வசிக்கின்றார். ஒன்றரை வயதில் ஆங்கிலம் வங்காளி மொழி கற்கத் தொடங்கி இந்தி, ஜெர்மன், பிரஞ், டச்சு, மொழிகளிலும் திறமை பெற்று விட்டாள். பி.எஸ்.சி எனும் பட்டம் பெற வேண்டிய படிப்புக்களையும் படித்து முடித்து விட்டாள்.

கடினமான கணக்குகளும் விடை காண்பதும், நிலக்கரி பற்றிய ஆராய்ச்சியும் அவளது பொழுது போக்காய் உள்ளன.
சங்கீதம் படிக்கின்றாள். ஆர்மோனியம் வாசிக்கின்றாள்.
இவளது திறமையை அறிந்து 89ம் ஆண்டு இந்தியப் பிரதமர் டெல்லிக்கு வரவழைத்து கௌரவித்தார். எதிர்காலத்தில் மருத்துவப் பணியேற்று மக்களுக்குச் சேவை செய்வதே தனது விருப்பம் என பிரதமரிடம் கூறியுள்ளாள்.

மவுசுமி தனது ஒன்பதாவது வயதில் 1991ம் ஆண்டு பட்டம் பெறவேண்டிய பரீட்சை எழுதப் போகிறாள். அதற்காக மேற்கு வங்காள அரசு பட்டத் தேர்வு எழுதும் வயது பற்றி மவுசுமிக்காக

www.tamilarangam.net

சட்டத்தில் மாற்றம் செய்துள்ளது.

எல்லோராலும் மவுசுமியைப் போல வயதிற்கு அப்பாற்பட்ட அறிவைப் பெறமுடியாமல் இருக்கலாம். ஆனால் வயதுக்கு ஏற்ற அறிவைக் கூடவா பெறமுடியாது?

"அமுதம்" எதிர்வரும் தைப் பொங்கல் தினம் முதலாவது ஆண்டை (வயதை) பூர்த்திசெய்து கொள்கின்றது —

606வது தடவை

# கிடைத்த வெற்றி

மருந்தே கிடையாது என்று பழங்காலத்தில் கைவிடப்பட்ட நோய்களில் கிரந்திப் புண்ணும் ஒன்றாகும். கிரந்தி என்பது பெரும்பாலும் குழந்தைகளுக்கு ஏற்படும் அவியல் நோயாகும். தலை முகம் கை கால் என்று புண்கள் வரும்.

பல வைத்தியர்கள் ஒன்று சேர்நது இதற்கு மருந்து கண்டு பிடிக்க முடியாது என்று விட்டனர். ஆனால் எள்ளிக் என்னும் ஜெர்மன் ரசாயன அறிஞருக்கு இதற்கு எப்படியும் ஒரு மருந்து கண்டு பிடித்து தீருவது என்ற ஆவல் ஏற்பட்டது.

முயற்சியில் இறங்கினார். நீண்டகாலம் சென்ற பின்னர் ஒர் உண்மையயை அவர் கண்டறிந்தார். இரண்டு வகையான மருந்துகளைக் கலப்பதுதான், வழி என அவர் கண்டார். ஆனால் அது அவரால் முடியவில்லை. தொடர்ந்து முயற்சித்தார். மனம் சோரவில்லை. 605 தடவை முயற்சித்து முடியாமல் போனது. இருந்தும் 606வது தடவையாக முயற்சித்தபோது அவர் நினைத்த மாதிரி மருந்து கலக்கத் தொடங்கியது.

கிரந்திப் புண்ணுக்கான மாற்று மருந்தை எர்னிக் கண்டு பிடித்தார். தனது வெற்றியை கண்டு பிடித்த மருந்துக்கு 606 என்றே பெயரிட்டார். உலகிலேயே இதுவே சிறந்த மருந்தாக உள்ளது.

www.tamilarangam.net

# கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

**'ப'வில் தொடங்கும் பொருட்கள் இங்கே எத்தனை உள்ளன? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?**



www.tamilarangam.net



1

"சின்னச் சின்னப் பாப்பா
சிங்காரப் பாப்பா
உன்னைப் போலப் பாப்பா
உலகில் இல்லை, கேட்பாய்"

# தெனாலிராமன்

## ஆளுக்குப் பாதி !

கோகுலாஷ்டமி தினம். கண்ணன் பிறந்தநாள். அன்றையத் தினம் ஆயர்குல மக்களும் மற்றவர்களும் கண்ணனை வணங்கிக் கோலாகலமாயிருந்தனர்.

இச்சமயத்தில் குச்சிப்புடி என்னும் ஊரிலிருந்து ஒரு நாட்டியக் குழு விஜயநகருக்கு வந்திருந்தது.

அவர்கள் பல நாட்டிய நாடகங்களை நடத்தி வந்தனர். அவற்றில் கிருஷ்ணலீலா என்னும் நாட்டிய நாடகம் பிரசித்தி பெற்றது.

கோகுலாஷ்டமியன்று அரண்மனையில் அவர்களுடைய கிருஷ்ணலீலா நாடகத்தை நடத்தச் சொன்னார் இராயர்.

குச்சிப்புடி நாட்டியக் குழுவினரும் மன்னர் சொன்னதற்கு ஒப்புக் கொண்டனர்.

www.tamilarangam.net

அன்று இரவு அரண்மனையிலுள்ள அரங்கில் கிருஷ்ணலீலா நாடகம் நடைபெற இருந்தது.

அந்த நாடகத்தைக் காண அமைச்சர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் பிறருக்கும் அழைப்புகள் அனுப்பப் பட்டன. ஆனால், தெனாலி இராமனுக்கு மட்டும் அழைப்பு அனுப்ப வேண்டாமென்று இராயர் கூறிவிட்டார்.

ஏனெனில், 'இராமன் சும்மாயிருக்க மாட்டான். ஏதாவது குறும்புத்தனம் செய்து நாடகத்தைக் கெடுத்துவிடுவான்' என்று நினைத்தார், இராயர்.

இராமனுக்கு அழைப்பு அனுப்பாதது மட்டுமில்லை, அவனை அரண்மனைக்குள்ளேயே விடக் கூடாதென்று வாயில் காவலர்களுக்கும் உத்தரவிட்டு விட்டார்.

இதை அறிந்த இராமன் சும்மாயிருக்கவில்லை. நேரே அரண்மனைக்குச் சென்றான்.

அப்பொழுது நாடகம் நடந்து கொண்டிருந்தது. வாயில் காவலன் இராமனைப் பார்த்து விட்டான். இராயர் உத்தரவிட்டிருந்தது அவனுடைய நினைவுக்கு வந்தது. உடனே இராமன் உள்ளே செல்லாதவாறு வழியை மறித்துக் கொண்டான்.

"உங்களை உள்ளே விடக்கூடாதென்று மன்னரின் உத்தரவு" என்றான், வாயில் காவலன்.

"நான் அவசர காரியமாக அரசரைப் பார்க்க வேண்டும். நான் அவரிடம் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லப் போகிறேன். இது ரொம்பவும் நல்ல செய்தி. இப்பொழுதே போய் அதனை அவரிடம் சொல்ல வேண்டும். நான் சொல்லும் செய்தியைக் கேட்டதும் அவர் மகிழ்ந்து போவார். எனக்குப் பல பரிசுகள் அளிப்பார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தச் சமயம் என்னைத் தடுக்காதே! எனக்குக் கிடைக்கும் பரிசில் உனக்கு ஏதாவது தருகிறேன்'' என்றான் இராமன்.

''ஏதாவது என்று சொன்னால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். கணக்காக இருக்க வேண்டும். உங்களுக்குக் கிடைக்கும் பரிசில் எனக்குச் சரிபாதி கொடுப்பதாக இருந்தால் உங்களை உள்ளே போக அனுமதிக்கிறேன்'' என்றான் வாயில் காப்போன்.

இராமனும் வாயில் காப்போன் சொன்னதற்கு ஒப்புக் கொண்டான்.

இரண்டாவது வாயிலுக்குச் சென்றதும் அங்கு ஒரு காவலன் இருந்தான். அவனும் இராமன் உள்ளே செல்லாதவாறு தடுத்தான்.

அவனிடமும் முதல் காவலனிடம் கூறியதையே கூறித் தனக்குக் கிடைக்கும் வெகுமதியில் அவனுக்குச் சரிபாதி கொடுத்து விடுவதாகச் சொன்னான்.

இரண்டாவது வாயில் காவலனும் அவனை உள்ளே போக அனுமதித்தான்.

அரண்மனைக்குள் சென்ற இராமன் ஒருவரும் அறியாதவாறு பின்புற வழியாக நாடகம் நடக்கும் மேடைக்குள் நுழைந்துவிட்டான்.


நடிகர்கள் வேடம் போட்டுக்கொண்டு கிருஷ்ண லீலா நாடகத்தை நடித்துக்கொண்டிருந்தனர்.

சபையோர் மிகுந்த ஆர்வத்துடன் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இச்சமயத்தில் நாடக மேடைக்குள் நுழைந்த தெனாலி இராமன் ஒரு தடியினால் கிருஷ்ணன் வேடம் போட்டுக் கொண்டிருந்தவனை நையப்புடைக்க ஆரம்பித்தான்.

www.tamilarangam.net

கிருஷ்ணன் வேடம் போட்டவனோ குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டே உள்ளே ஓடி விட்டான்.



நாடகம் பாதியில் நிறுத்தப்பட்டுத் திரை விடப் பட்டது.

நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது சுவை யான கட்டத்தில், இடையில் புகுந்து குழப்பம் விளை வித்ததற்காகத் தெனாலி இராமனின்மீது கோபம் கொண்டார் இராயர்.

காவலர்களை விட்டு இராமனை இழுத்து வரச் சொன்னார்.

தெனாலி இராமன் வந்ததும் ''என்ன... இது, கலாட்டா? எதற்காக கிருஷ்ணன் வேடம் போட்ட வனை அடித்தாய்?'' என்று கேட்டார், இராயர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அரசே, க்ருஷ்ணன் செய்யும் துடுக்குத்தனங்கள் தாளாது கோபிகா ஸ்திரீகள் அவனை மத்தினால் மொத்து மொத்து என்று மொத்தியிருக்கின்றனர். இவ்வளவு அடிகளையும் வாங்கிக்கொண்டு பேசாமல் இருந்த கண்ணன் நான் ஒரு சிறு தடியினால் சில அடிகள் அடித்ததற்கே இந்தக் கூப்பாடு போட்டாரே!" என்றான் இராமன்.

இராமன் சொன்னதைக் கேட்டதும் சபையிலிருந்தவர்கள் சிரித்துவிட்டனர். ஆயினும் இராயரின் கோபம் தணியவில்லை.

"அனுமதியின்றி உள்ளே நுழைந்தது ஒரு குற்றம் நாடக நடிகரைத் தாக்கிக் குழப்பம் விளைவித்தது இரண்டாவது குற்றம் எனவே ஒவ்வொரு குற்றத்திற்கும் ஐம்பது கசையடிகள் தரவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்" என்றார், இராயர்.

தண்டனையை நிறைவேற்ற காவலர்கள் இராமனிடம் நெருங்கினார்கள்.


"சற்று பொறுங்கள். எனக்குக் கிடைப்பதில் ஆளுக்குப் பாதி தருவதாக இரண்டு பேருக்கு ஏற்கனவே வாக்குறுதி அளித்திருக்கிறேன். அவர்கள் இரண்டு பேருக்கும் ஆளுக்கு ஐம்பது கசையடிகள் கொடுத்து விடுங்கள்" என்று கூறிய இராமன், காவலர்களை வாயிற்காவலர்களிடம் அழைத்துச் சென்றான். —(தொடரும்)

தமிழுக்கு உயிர் கொடுப்பதை விட தமிழைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதே சிறந்தது –

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# AMUTHAM




KINDERFREUNDLICH MAGAZINE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்